**மாந்தை கிழக்கு பிரதேசசபை**

**முல்லைத்தீவு மாவட்டம்**

-----------------------------

## 1. நிதிக் கூற்றுக்கள்

--------------------

### 1.1 நிதிக் கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்

-----------------------------------------

2015 ஆம் ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2016 மார்ச் 21 இல் கணக்காய்விற்காக சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் முன்னைய ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2015 மார்ச் 20 இல் கணக்காய்விற்காக சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. 2015 ஆம் ஆண்டிற்கான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2017 மே 05 இல் சபையின் செயலாளருக்கு வழங்கப்பட்டது.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

----------------------------------------------------

இந்த அறிக்கையின் 1.3 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து மாந்தை கிழக்கு பிரதேசசபையின் 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க நிதிக் கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

--------------------------------------------

#### 1.3.1 கணக்கீட்டுக் கொள்கைகள்

------------------------------

நிதிக்கூற்றுக்களை தயாரிக்கும் போது பின்பற்றப்பட்டிருந்திருக்க வேண்டிய கணக்கீட்டுக்கொள்கைகள் மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

## 1.3.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

--------------------------------

கீழ்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 3 ஆண்டுகளுக்கு முன்னர் அரச, அரச சார்பற்ற நிறுவனங்களால் சபைக்கு நன்கொடையாக வழங்கப்பட்டிருந்த 149 எண்ணிக்கையான நன்கொடைப் பொருட்களின் பெறுமதி கணிப்பிடப்பட்டு இறுதிக் கணக்குகளுக்கு கொண்டு வரப்பட்டிருக்கவில்லை.

(ஆ) சபையின் பாவனையிலுள்ள 06 வாகனங்களின் பெறுமதிகள் மதிப்பிடப்பட்டு கணக்குகளுக்கு கொண்டுவரப்பட்டிருக்கவில்லை.

(இ) சபைக்குரியதான 09 ஆதனங்களில் பெறுமதிகள் மதிப்பிடப்பட்டு கணக்குகளில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை.

(ஈ) 2010 மற்றும் 2011 ஆம் ஆண்டு காலப்பகுதிகளுக்கு காணிப்பதிவாளர் நாயகத்திடமிருந்து பெறப்பட வேண்டியிருந்த முத்திரைத் தீர்வைக் கட்டணங்களின் கூட்டுமொத்தம் ரூபா. 30,000 கணக்குகளுக்கு கொண்டுவரப்படாமையினால் திரண்டநிதி அதே தொகையால் குறைவாகக் கணக்கிடப்பட்டிருந்தது.

## 1.3.3 பெறப்படவேண்டிய மற்றும் செலுத்தப்படவேண்டிய கணக்குகள்

---------------------------------------------------------------------------

அரசிறைக்கடனாளிகளின் 07 வகையான கணக்கு நிலுவைகளின் கூட்டு மொத்தம் ரூபா 4,878,104 ஆனது ஒரு வருடத்திற்கு மேலாக அறவிடப்பட்டிருக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

### 1.3.4 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்காமைகள்

---

பின்வரும் சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டிருந்தன.

| சட்டங்கள், விதிகள் பிரமாணங்கள் மற்றும் தீர்மானங்களுடனான தொடர்பு | | இணங்காமைகள் |
|---|---|---|
| (அ) | 1988 (பிரதேச சபைகள் நிதி, நிர்வாக) ஒழுங்கு விதி | |
| (i) | அத்தியாயம் III விதி 24 | பிரதேச சபை ஸ்தாபிக்கப்பட்டு 03 வருடங்களுக்குள் பிரதேச சபைக்குரித்தான வீதிகள் மற்றும் ஒழுங்கைகளின் பட்டியல்கள் அரச வர்த்தகமானியில் பிரசுரிக்கப்பட்டிருக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. |
| (ii) | அத்தியாயம் III விதி 33 | சோலை வரி சம்பந்தமான கணிப்பீடொன்று மேற்கொள்ளபபட்டிருக்கவில்லை. |
| (iii) | அத்தியாயம் V விதி 140 | தீர்த்துவைக்கப்படாத ரூபா 58,442 முற்பணம் தொடர்பாக நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. |
| (iv) | அத்தியாயம் IX விதி 180 | காசு களஞ்சியம் என்பவற்றுக்குப் பொறுப்பாயிருக்கும் அலுவலர்களிடம் பிணைப் பணம் பெற்றுக் கொள்ளப்பட்டிருக்கவில்லை. |
| (ஆ) | பொதுநிர்வாக உள்நாட்டலுவல்கள் அமைச்சின் 10 ஒக்டோபர் 1990 ஆம் திகதிய சுற்று நிருப இல 41/90 | சபையின் வாகனங்களுக்கு எரிபொருள் நுகர்வுப் பரீட்சிப்பு மேற்கொள்ளப் பட்டிருக்கவில்லை |
| (இ) | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் பெறுகை வழிகாட்டி கைநூல் -2006 | |
| (i) | பிரிவு 5.4.12 | பெறுமதி சேர் வரி (VAT) சபையினால் செலுத்தப்பட்ட பின்னர் அதன் விபரங்கள் அடுத்து வரும் மாதம் 15ம் திகதிக்கு முன்னர் உள்நாட்டு இறைவரி திணைக்களத்திற்கு அதன் பிரதியை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கும் அனுப்ப நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. |

| | | |
|---|---|---|
| (ஈ) | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதி ஒழுங்கு விதி 571 | 25 காலம் கடந்த வைப்புக்கள் கூட்டுமொத்தம் ரூபா 36,672 தொடர்பாக 02 தொடக்கம் 04 வருடங்களாக நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. |

## 2. நிதிப் பகுப்பாய்வு

--------------------

### 2.1 நிதி விளைவுகள்

--------------------

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின்படி, 2015 திசெம்பர் 31 அன்றுடன் முடிவடைந்த ஆண்டுக்கான சபையின் செயற்பாடுகளின் பெறுபேறு மீண்டுவரும் செலவினத்திலும் கூடிய வருமான மிகையாக ரூபா 11,825,705 ஆக விளைந்திருந்ததுடன் நேரொப்பான முன்னைய ஆண்டில் செலவினத்திலும் கூடிய வருமானமாக ரூபா 3,275,448 ஆகவும் விளைந்திருந்தது. முன்னைய ஆண்டுடன் ஒப்பீடு செய்யும் போது நிதி விளைவுகள் ரூபா 8,550,257 ஆல் அதிகரித்திருந்தமையைக் காட்டுகிறது. மீண்டுவரும் மானியங்களில் ஏற்பட்ட அதிகரிப்பு இதற்கு பிரதான காரணமாக அமைந்திருந்தது.

### 2.2 நிதிசார் பகுப்பு ரீதியான விளைவுகள்

--------------------------------------------------

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின்படி மீளாய்வாண்டிற்கான சபையினுடைய நிதிப்பெறுபேறுகள் தேறிய மிகையாக ரூபா. 547,824 ஆக விளைந்திருந்ததுடன் நேரொப்பான முன்னைய ஆண்டின் செயற்பாட்டின் தேறிய மிகையாக ரூபா 3,162,948 விளைந்திருந்தது. இது மீளாய்வாண்டுக்கான இறுதி நிதிப்பெறுபேறுகள் ரூபா 2,615,124 ஆல் குறைவடைந்துள்ளமையை காட்டுகின்றது.

### 2.3 நிதி மீளாய்வு

-------------------

**தொழிற்படு மூலதன முகாமைத்துவம்**

-------------------------------------------

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின்படி மீளாய்வாண்டிற்கான சபையினுடைய தொழிற்படு மூலதனம் ரூபா. 19,691,486 ஆக விளைந்திருந்ததுடன் நேரொப்பான முன்னைய ஆண்டின் தொழிற்படு மூலதனம் ரூபா. 19,301,317 விளைந்திருந்தது. இது மீளாய்வாண்டிற்கான தொழிற்படு மூலதனம் ரூபா. 390,169 ஆல் அதிகரித்துள்ளமையைக் காட்டுகின்றது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

--------------------------

### 3.1 முகாமைத்துவ பலவீனம்

-----------------------------

சபைக்குரிய 15 ஆளணி வெற்றிடங்களை நிரப்புவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 3.2 சொத்து முகாமைத்துவம்

-------------------------------

பின்வரும் அவதானிப்புக்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) 2010 ம் ஆண்டில் உலக உணவுத் திட்டத்தினால் வழங்கப்பட்டிருந்த 36 எண்ணிக்கையான மண்வெட்டி மற்றும் சவல்கள் கடந்த 6 வருடங்களாக பயன்பாடின்றி சபையின் களஞ்சிய அறையில் காணப்பட்டிருந்தது.

(ஆ) மீளாய்வாண்டிற்கான வருடாந்த பொருட் கணக்கெடுப்பு சபையினது அறிக்கையின் பிரகாரம் நிதி ஒழுங்குவிதி 757 இற்கமைவாக மேற்கொள்ளப்பட்டிருக்கவேண்டிய நடவடிக்கைகள் பற்றி கணக்காய்வுத் திகதி வரை அறியத்தரப்பட்டிருக்கவில்லை.

### 3.3 ஒப்பந்த நிர்வாகம்

-----------------------

போதியளவு நிதி வளங்களைக் கொண்டிராத சனசமூக அமைப்புகளுக்கு சபையின் பெறுகைக்குழுவின் விதிப்புரையினை நேரடியாக ஒப்பந்த வேலைகள் வழங்கப்பட்டிருந்தன. இது நிதி திட்டமிடல் அமைச்சின் 05.01.2012 திகதியிட்ட 1/2012 இலக்க சுற்றுநிருபத்திற்கு முரணான நடவடிக்கையாகும். எவ்வாறாயினும், அத்தகைய சனசமூக நிலையங்களுக்கு வழங்கப்பட்டிருந்த வேலைகள் செயன்முன்னேற்ற அறிக்கைகளும் கணக்காய்வினால் வினவிய போதிலும் சமர்ப்பித்திருக்கவில்லை.

### 3.4 செயற்திட்ட தாமதங்கள்

-------------------------------

மீளாய்வாண்டில் முன்னெடுக்கப்பட்டிருந்த தலா ஒரு மில்லியன் பெறுமதியான வேலைத்திட்டத்திற்குரிய 09 செயற்திட்டங்களின் கூட்டுமொத்த தொகை ரூபா 1,570,000 பெறுமதியான வேலைகள் ஆரம்பிக்கப்பட்டிருந்த போதிலும் நிறைவேற்றப்பட்டிராது சில்லறைக்கடன்கொடுத்தோர் கணக்கில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்ததுடன் அவை கணக்குகளில் செலவினமாக காட்டப்பட்டிந்தமையும் அவதானிக்கப்பட்டிருந்தது. எவ்வாறாயினும் மீளாய்வாண்டின் இறுதி வரை இத்தகைய வேலைத்திட்டங்களை நிறைவேற்றுவதற்கு சபையினால் ஆக்கபூர்வமான நடவடிக்கைகள் எவையும் மேற்கோள்ளப்பட்டிருக்கவில்லை.

### 3.5 திண்மக்கழிவு முகாமைத்துவம்

--------------------------------------

சபையின் எல்லைப்பரப்பிலிருந்து அகற்றப்படுகின்ற குப்பை கூளங்களை எரித்தல் மற்றும் புதைத்தல் செயற்பாடுகளை மட்டுமே சபையால் மேற்கொள்வதேயன்றி கொம்பொஸ்ட் மற்றும் மீள்சுழற்சி செயற்திட்டங்கள் சபையினால் முன்னெடுக்கப்பட்டிருக்கப்படவில்லை

## 4. கணக்களிபொறுப்பும் நல்லாட்சியும்

--------------------------------------

### 4.1 பாதீட்டுக் கட்டுப்பாடு

-----------------------

பாதீட்டு மதிப்பீடானது சரியான முறையில் தயாரிக்கப்பட்டிராமையும் மதிப்பீட்டை சரியான முறையில் திட்டமிட்டு நிகழ்ச்சிப்படுத்தாமையாலேயுமே மீளாய்வாண்டிற்கான மதிப்பீட்டு செலவினம், உள்ளபடியான செலவினம் என்பவற்றுக்கிடையே ரூபா 63,369 தொடக்கம் ரூபா 1,916,711 வரையான வேறுபாடுகள் அவதானிக்கப்பட்டிருந்தன.

### 4.2 பெறுகைத் திட்டம்

-----------------------

மீளாய்வாண்டிற்கான சபைக்குரிய பெறுகைத்திட்டம், மற்றும் பெறுகைக்கால அட்டவணை என்பன 2006 ம் ஆண்டு பெறுகை வழிகாட்டி கைநூலின் பிரிவு 4.2 இன் பிரகாரம் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

### 4.3 உள்ளகக் கணக்காய்வு

----------------------------

சபையின் நடவடிக்கைகளை கணக்காய்வு செய்து வினைத்திறனான முறையிலும் அதன் செயற்பாடுகளை மேற்கொள்வதற்குமான உள்ளகக் கணக்காய்வு அலகொன்று உருவாக்கப்பட்டு மீளாய்வாண்டிற்கான உள்ளகக் கணக்குப் பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

### 4.4 கணக்காய்வு முகாமைத்துவக் குழுக் கூட்டம்

------------------------------------------------------

நிதி திட்டமிடல் அமைச்சின் செயலாளரின் 09.06.2009ம் திகதிய கணக்காய்வு முகாமைத்துச் சுற்றுநிருப இல DMA/2009 (1) ஏற்பாடுகளின் பிரகாரம் சபையின்

செற்பாடுகளை வினைத்திறனாக மேற்கொள்வதற்கு மீளாய்வாண்டில் குறைந்தது 04 கணக்காய்வு முகாமைத்துவக் கூட்டங்கள் நடாத்தப்பட்டிருந்திருக்க வேண்டுமெனக் குறிப்பிடப்பட்டிருந்த போதிலும் அவ்வாறான கூட்டமெதுவும் நடாத்தப்பட்டிருக்கவில்லை.

## 5. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

----------------------------------------

கீழ்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுப் பரப்புகள் மீது விசேட கவனம் கோரப்படுகின்றது.

(i) வருமான சேகரிப்பு
(ii) நிலையான சொத்துக்கள்
(iii) கணக்கீடு
(iv) ஆளணி
(v) வாகனங்களின் பயன்படுத்துகை
(vi) நானாவித வைப்புக்கள்
(vii) பாதீட்டுக் கட்டுப்பாடு
(viii) பெறுகை நடைமுறை